2018 மே 31]

96—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***7933—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகமெங்கும் கைத்தறி பட்டு மற்றும் துணிநூல் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கென ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள் கேட்டிருக்கின்ற இந்தக் கேள்வி முற்றிலும் எனது துறைக்குச் சம்பந்தமில்லாத ஒன்று. இது வேளாண் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. இருப்பினும் நான் இதற்குப் பதில் தருவதற்குத் தயாராக இருக்கின்றேன். கைத்தறி மற்றும் பட்டு விற்பனைக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர முடியுமா என்கிற வினாவினை எழுப்பி இருக்கின்றார். தமிழகத்தில் கிட்டத்தட்ட 268 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. வேளாண் பெருங்குடி மக்களிடத்தில் ஒரு சிறப்பான வரவேற்பை இவை பெற்றுள்ளன. தானியங்கள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 42 வகையான வேளாண் விளைபொருட்களை அங்கே சந்தைப்படுத்துவதற்காக, விலை குறையாமல் இருக்கவும், அவர்கள் நியாயமான விலையைப் பெற வேண்டும் என்பதற்காகவும், எடை குறையாமல் அவர்களுடைய பொருட்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகவும், அந்த விளைபொருட்களுக்கு விலை கிடைக்காதபோது கடன் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், இந்த வேளாண் விற்பனை ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. பட்டுக்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை அமைப்பது என்பது பொருத்தம் இல்லாத ஒன்று. ஏனென்றால் பொருட்களை இருப்பு வைத்தால், அதற்கு கழிவு தர வேண்டும், விலை உயராது. ஓராண்டில் பட்டுப் புடவை ஒன்று விற்கவில்லை என்றால், அடுத்த ஆண்டினை அது எட்டுகின்றபோது அதனுடைய விலையை குறைத்து விற்க

முடியுமே தவிர, அதனை அதிக விலைக்கு விற்க முடியாது. அதோடு நாம் விளைபொருட்களை இருப்பு வைக்கின்றோம் என்று சொன்னால் அதை குளிர் சாதன அறையில், பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும். பட்டுப் புடவைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் போன்ற இடங்களில் நாம் இருப்பு வைக்க முடியாது. எனவே, கைத்தறி பட்டு மற்றும் துணிநூல் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கென ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க எந்த சாத்தியக்கூறும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன். பாரம்பரியமிக்க தமிழகத்தின் பெருமைகளுள் மிக முக்கியமான ஒன்று கைத்தறி பட்டு சேலை. தமிழகத்தில் பல நகரங்களில் கைத்தறி பட்டு சேலை தயாரிப்பு நடைபெற்றாலும் குறிப்பாக காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் பட்டுக்கு மிக பிரசித்தி பெற்று விளங்குகின்றன. அங்கு அதிக எண்ணிக்கையில் நெசவாளர்கள் தொழில் செய்து வருகின்றார்கள். காஞ்சிபுரத்தில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான பட்டு கைத்தறிகள் உள்ளன. அதேபோல் தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், அய்யம்பேட்டை, தாராசுரம், துவரங்குறிச்சி, கும்பகோணம் மற்றும் திருபுவனம் போன்ற ஊர்களில் பட்டு கைத்தறிகள் அதிகமாக உள்ளன. திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக சுமார் ரூ.40 கோடி வரை பட்டு ஜவுளி வியாபாரம் நடைபெறுகிறது. எனவே, மேற்கண்ட ஊர்களில் பல்லாயிரக்கணக்கான பட்டு கைத்தறி நெசவுத் தொழிலை நம்பி உள்ளவர்களின் வாழ்வாதாரம் சிறக்கும் வகையில் அங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்து, அதன்மூலம் பட்டு, பாவு, ஜரிகை, பண்ணை, ஜரி, ஜக்கார்டு பெட்டி உள்ளிட்ட தளவாடப் பொருட்களை மலிவு விலையில் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2018 மே 31]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

தாய்–சேய் நல மையம்

***2284—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, அசூரில் உள்ள தாய்–சேய் நல மையம் முழு நேரமும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவெறும்பூர் தொகுதி, அசூரில் உள்ள தாய்–சேய் நல விடுதி, health sub centre, *அதாவது துணை சுகாதார நிலையம் ஆகும். அந்தத் துணை சுகாதார நிலையத்திலே பொது சுகாதாரத் துறையின்கீழ் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட பயணத் திட்ட அட்டவணையின்படி தொடர்ந்து தங்கள் பணியை செவ்வனே ஆற்றி வருகிறார்கள். ஆக, அந்த வகையிலே கிராம சுகாதார செவிலியர்கள் தொடர்ந்து பணியிலே அந்தப் பயணத் திட்டத்தின்படி, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், ஒவ்வொரு நாளும் அந்த அட்டவணைப்படி பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், மேற்கொண்டு அந்த தாய்–சேய் நல விடுதி முழு நேரமாக செயல்படக்கூடிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*